**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 049 **நாள் :** 07.02.2023

**சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 51 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (07.02.2023) வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் உள்ள 32 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 51 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (07.02.2023) ரிப்பன் கட்டடத்தில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் 32 மேல்நிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள், 92 நடுநிலைப்பள்ளிகள், 119 தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. மாநகராட்சி பள்ளிகளில் 98,633 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். 2962 ஆசியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இதில் 32 மேல்நிலைப்பள்ளிகளில் 11,395 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இந்த மேல்நிலைப் பள்ளிகளில் 229 முதுநிலை ஆசிரியர்கள் ஏற்கனவே பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது தமிழ் பாடப்பிரிவில் 12 ஆசிரியர்கள், ஆங்கில பாடப்பிரிவில் 5 ஆசிரியர்கள், கணிதப் பாடப்பிரிவில் 4 ஆசிரியர்கள், இயற்பியல் பாடப்பிரிவில் 3 ஆசிரியர்கள், வேதியியல் பாடப்பிரிவில் 5 ஆசிரியர்கள், தாவரவியல் பாடப்பிரிவில் 4 ஆசிரியர்கள், விலங்கியல் பாடப்பிரிவில் 4 ஆசிரியர்கள், வணிகவியல் பாடப்பிரிவில் 2 ஆசிரியர்கள், பொருளாதார பாடப்பிரிவில் 6 ஆசிரியர்கள், வரலாறு பாடப்பிரிவில் 2 ஆசிரியர்கள், அரசியல் அறிவியல் பாடப்பிரிவில் 1 ஆசிரியர், மனையியல் பாடப்பிரிவில் 2 ஆசிரியர்கள், உடற்கல்வி பாடப்பிரிவில் 1 ஆசிரியர் என ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 51 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இன்று பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

**மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்பொழுது தெரிவித்ததாவது :**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படியும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மாநகராட்சிப் பள்ளிகளின் கட்டமைப்பை தனியார் பள்ளிகளுக்கு இணையாக தரம் உயர்த்தும் வகையிலும், மாணவர்களின் கற்றல் திறன் மற்றும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னைப் பள்ளிகளின் கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மாணவர்களின் கற்றல் திறன் மற்றும் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்கவும்,

ஒவ்வொரு வாரமும் பாடவாரியாக வாராந்திரத் தேர்வு நடத்தி மாணவர்களின் கற்றல் அடைவுத் திறனை மேம்படுத்திடவும், கற்றல் அடைவுத் திறன் குறைவாக உள்ள மாணவர்களை பாடப்பிரிவுகளின் அடிப்படையில் கண்டறிந்து, அவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்திடவும், அன்றன்று நடத்தும் பாடங்களை மாணவர்கள் ஆர்வமுடன் கற்கும் வகையில் நாள்தோறும் வீட்டுப்பாடம் வழங்கி கண்காணித்திடவும் மாண்புமிகு மேயர் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் முதன்மைச் செயலாளர்/ ஆணையாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., அவர்கள், கல்வி அலுவலர் திருமதி சாந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**